# ஆனமடுவவில் குண்டு வெடிப்பு; 4 மாணவர் பலி

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 22 இதழ் 141
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 06 07 1993

(கொழும்பு)

புத்தளம் மாவட்டத்தில் உள்ள ஆனமடுவ பகுதியில் போத்தல் குண்டு ஒன்று வெடித்ததில் 4 பாடசாலை மாணவர்கள் பலியானார்கள். நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

ஆனமடுவ என்ற இடத்தில் வயல்வெளிகளில் மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்த பாடசாலை மாணவர்களே, இக்குண்டு வெடிப்பில் பலியானதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இந்த மாணவர்கள் வயல்வெளிகளில் கண்டெடுத்த போத்தல் ஒன்றைத் திறக்க முற்பட்டபோது

(4-ம் பக்கம் பார்க்க)

## 'றுகுணு' கப்பல் பற்றி கொழும்பில் தவறான தகவல்

(கொழும்பு)

''றுகுணு'' கப்பலில் பாரிய கொண்டுவரப்பட்ட பொருள்களை விடுதலைப்புலிகள் கொள்ளையடித்துச் சென்றனர் என்று கொழும்புப் பத்திரிகைகள் தவறான செய்திகளையே வெளியிட்டன. கூட்டுப் படைத்தலைமைச் செயலகம் இவ்வாறு அறிவித்தது.

றுகுணு கப்பலில் கொண்டு செல்லப்பட்ட பொருள்கள் யாவும் தற்போது காலி

(4-ம் பக்கம் பார்க்க)

# "எதிரிகள் எம்மைச் சூழ்ந்து நிற்கிறார்கள் — ஒரு தற்காப்புப் போரை நாம் முழு சக்தியுடன் நிகழ்த்த வேண்டும்"

## கரும்புலிகள் மத்தியில் தலைவர் பிரபாகரன் உரை

(யாழ்ப்பாணம்)

பலம் வாய்ந்த எதிரிகள் எம்மைச் சூழ்ந்து நிற்கிறார்கள். எம்மை ஒழித்துக்கட்ட உறுதிபூண்டு நிற்கிறார்கள். முழு உலகமுமே ஒன்று திரண்டு எமது எதிரிகளுக்கு முண்டு கொடுத்துவருகின்றது. இந்த இக்கட்டான, ஆபத்தான சூழ்நிலையில் நிர்க்கதியாக நிற்கும் ஒரு மக்கள் சமூகம் என்ற ரீதியில் நாம் எம்மாலான சகல வழிகளையும் கையாண்டு, எமது சக்திகள் அனைத்தையும் பிரயோகித்து ஒரு தற்காப்புப் போரை நிகழ்த்தவேண்டும்.

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரன் கரும்புலிகள் தினத்தை யொட்டி நேற்று கரும்புலிகள் மத்தியில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தமது உரையில் கூறியதாவது:

கரும்புலிகள் நாளாகிய இன்றைய தினத்தில் கரும் புலி வீரர்களாகிய உங்கள் மத்தியில் கரும்புலிகள் பற்றி பேசுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இத்தினத்தில் முழுஇலங்கையைத் திகையும் அதிர வைத்த ஒரு சம்பவம் நிகழ்ந்தது. எமது விடுதலை இயக்கத்தின் முதலாவது கரும்புலி வீரன் கப்டன் மில்லர் ஓர் ஒப்பற்ற சாதனையை நிலைநாட்டினான்.

எமது விடுதலை வரலாற்றில் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு என்றுமே நிகழாத ஓர் அதி



யம் நிகழ்ந்தது

### எதிரியின் கோட்டை சரிந்தது

எதிரியின் அசைக்கமுடியாத கோட்டையாகத் திகழ்ந்த ஒரு இராணுவ முகாமை இவ் இளம்புலிவீரன் தனித்து ஒருவனாகச் சென்று தகர்த்தெறிந்தான்.

ஒரு பெரிய படையணியாலும் செய்யமுடியாத பாரிய இராணுவ சாதனையை ஒரு தனிமனிதனாகச் சென்று இவன் சாதித்து முடித்தான்.

எரிமலையை சுமந்து சென்று எதிரியின் பாசறைக்குள் வெடிக்க வைத்தான்.

### பூகம்பத் தாக்கு

இப்பூகம்ப தாக்குதல் நிகழ்வு அன்றைய வரலாற்றுச் சூழ்நிலையையே மாற்றி அமைத்துவிட்டது.

எதிரியின் சைனியங்கள் நிலை குலைந்து பின்வாங்கின. ஒரு பெரிய படையெடுப்பின் பேரழிவிலிருந்து யாழ்ப்பாணம் தப்பிக் கொண்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

## கரும்புலிகள் தினம் நேற்று உணர்வுடன் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள் தினம் நேற்று தமிழீழம் எங்கும் உணர்வு பூர்வமாகக் கொண்டாடப் பட்டது.

முக்கிய இடங்கள், விடுதலைப் புலிகளின் முகாம்கள் மற்றும் பொது இடங்களில் விசேடமாக அமைக்கப்பட்ட மேடைகளில் கரும்புலிகளின் உருவப் படங்கள் வைக்கப்பட்டிருந்தன.

சகல இடங்களிலும் கரும் புலிகளின் பாடல்கள் ஒலிபரப்

(2-ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு பகுதியில் புலிகள்-இராணுவம் கடும் மோதல்

(கொழும்பு)

மட்டக்களப்பின் சில பகுதிகளில் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடும் மோதல்கள் நிகழ்ந்துள்ளதாக இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி இந்திய வானொலி நேற்று தெரிவித்தது.

கொழும்பு மன்னாரில் நேற்று முன் தினம் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் உட்பட 5 பொலிசார்

2-ம் பக்கம் பார்க்க)

## போட்டிபூசல்களுடன் புலிகளை வெற்றிகொள்ள முடியாது

### - சிசில் வைத்தியரத்ன

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் நடைபெறும் போரில் இராணுவம் வெற்றி பெறவேண்டுமானால் முதலில் இராணுவத்தில் நிலவி வரும் போட்டி பூசல்கள் அகல வேண்டும் என இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன வடமத்திய மாகாணத்தில் இடம்பெற்ற இராணுவ வைபவமொன்றில் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

இராணுவத்துக்குள் அதிகாரி

(2ம் பக்கம் பார்க்க)

## பிரிட்டனில் தண்டனை பெற்ற இரண்டு தமிழரின் நிலை மீளாய்வு செய்யப்படும்

(லண்டன்)

பிரிட்டனில் ஆயுள் தண்டனை அனுபவித்துவரும் இரண்டு தமிழர்களின் தண்டனை மீளாய்வு செய்யப்படவுள்ளது.

ஐந்து வருடங்களுக்கு முன் இந்த இரண்டு தமிழர்களுக்கும் பிரிட்டன் ஆயுள் தண்டனை வழங்கியது.

குண்டு ஒன்றைவீசி மூவரைக் கொலை செய்த குற்றத்துக்காக இவர்கள் இருவருக்கும் இந்தத் தண்டனை வழங்கப்பட்டது. (இ)

## நொச்சிமோட்டைக்கு கவசவாகனங்கள் விரைவு

(வவுனியா)

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் 4 கவச வாகனங்கள் சகிதம் நொச்சிமோட்டை பாலத்தடிக்கு விரைந்ததாக தெரிய வருகிறது.

பின்னர் இரு கவச வாகனங்கள் நொச்சிமோட்டை இராணுவ காவலரணுக்கு சமீபமாக நிறுத்தப்பட்டதாகவும் ஏனைய இரு கவச வாகனங்

(2-ம் பக்கம் பார்க்க)

## தொலைத் தொடர்பு ஊழியர் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

(கொழும்பு)

தொலைத்தொடர்புகள் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் நாளை 7-ம் திகதி மேற்கொள்ளவிருந்த தமது வேலை நிறுத்தத்தைக் கைவிட்டனர்.

50 சதவீத சம்பள உயர்வு

(2-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### பாலாஜி புத்தகசாலை

புத்தம் புதிய டிசைன்களில் கண்ணுக்கு மெருகூட்டும் நவீன ரகப் பிறந்த நாள் வாழ்த்து மடல்கள் விற்பனையாகின்றன. 15% தள்ளுபடி. உங்கள் தெரிவுக்கு இன்றே முந்துங்கள் 16 பஸ்நிலையம், யாழ்ப்பாணம். (ஏ 3229)

### அராலியூராரின் நாடகங்கள்

இந்தியப் புத்தகங்களில்கூட வரவு வெளிவரும் நாடகங்களைக் காண்பது அருமை அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நாடகங்களை வாசியுங்கள், படியுங்கள் நடியுங்கள்! 1. கெட்டிக்காரர்கள், 2. முதலாம்பிள்ளை 30/-. (இ-256)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலைபிடி, தலைசுற்றுவியல், சருமநோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியகலாநிதி சி. இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (இ-231)

### விற்பனைக்கு

பாடசாலை புத்தகங்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், பாடசாலை உபகரணங்கள், O/L, A/L கடந்த கால வினா விடைகள் மற்றும் விண்ணப்பப்படிவங்கள் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள ஒரே ஸ்தாபனம். தினேஸ் புத்தகசாலை. 19, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (ஏ-3232)

— பெயர் மாற்றம் —
யாழ் நகரை வசிப்பிடமாகக் கொண்ட "கணேசா" ஆகிய எனது பெயர் G.V. Kanesalinkam என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்
G.V. Kanesalinkam,
298, காங்கேசன்துறை வீதி,
— யாழ்ப்பாணம். —
(சி 252)

## இராசி பலன்

**06-07-1993**

**செவ்வாய்க்கிழமை**

**(தமிழுக்கு ஆனி 22)**

துதிகை காலை 6-22 வரை திருவோணம் ந இ. 12-13 வரை இராகுகாலம் பகல் 2-52 முதல் 4-28 வரை சுப நேரம் காலை 10-28 முதல் 11-3? வரை சித்தயோகம்,

மேடம்: விவகாரதி சுபம், போஜன சிறப்பு, புகழ்.

இடபம், முயற்சி விக்னம், மனைவிதுயர், வெறுப்பு.

மிதுனம்: சகோதர துக்கம் மந்தநிலை, அச்சம்.

கடகம்: பெரியோர் கௌரவம், இனசன வருகை, மாற்றம்.

சிங்கம்: தொழில் லாபம், சயன சுகம், வெகுமதி.

கன்னி, முயற்சி தாமதம், பித்த மயக்கம், கண்டிப்பு.

துலாம்: சத்துருக்கள் பயம், புத்திரர் துக்கம், காரியதடை

(4-ம் பக்கம் பார்க்க)


## நவோதயம்.....வடக்கில்

கிறிஸ்தவப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கென

**தலைமைத்துவப் பயிற்சி மாநாடு**

ஆகஸ்ட் 2 (மாலை) முதல், 6 (காலை) வரை வதிவிடப் பாசறையாக யா/கைதடி நவீல்ட் பாடசாலையில் இடம்பெறும்.

★ விண்ணப்பப்படிவம்—கைப்பிரதியை உங்களது சபைப்பிரிவிலோ அல்லது எமது தொடர்பு முகவரியிலோ காலை 9-00—1-00 மணிக்கிடையில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள எமது தொடர்பு முகவரி:

நவோதயம்,
462, பிரதான வீதி, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.

★ குறித்த எண்ணிக்கையானவர்களே பங்குபற்ற இருப்பதால் உங்களது பதிவுகளை காலம் தாழ்த்தாது அனுப்பி வைக்கவும்.

விண்ணப்ப முடிவு திகதி — யூலை 10

நவோதயம் ஜெப நாள்: ஜூலை 10
காலை 9-00 — 12-00 வரை

யாழ். பரியோவான் ஆலய Fig மண்டபத்தில் நடைபெறும்.

செயற்குழு.

(இ-282)


## 31ம் நாள் நினைவஞ்சலி

## அந்தியேட்டி அழைப்பு



### அமரர் N. பொன்னையா தம்பையா

மலர்வு: 05-07-1927 உதிர்வு: 06-06-1993

அன்பின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய்
கலங்கரை விளக்காய் வாழ்ந்த குடும்பத்தின்
குலவிளக்கே
மின்னுமல் முழங்காமல் காலன் உங்களை
கவர்ந்தவேளை
என்ன நினைத்து எம்மைப் பிரிந்தீர்கள்
உள்ளம் உருகி உங்களை நினைத்து கண்ணீர் பெருக
கதறி அழுகிறோம்

ஆன்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகிறோம்

எமது துக்கத்தில் கலந்து கொண்டு பலவழிகளிலும் எமக்கு ஆறுதல் அளித்த உற்றார், உறவினர் அயலவர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள்.

இன்று (06-07-1993) நடைபெறும் அன்னாரது வீட்டுக்கிருத்திய நிகழ்ச்சிகளில் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்:

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்,
நண்பர்கள்,

தற்போதைய விலாசம்:
ஆனந்தா ஸ்ரோர்ஸ், சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பு.
க. மயில்வாகனம் சங்குவேலி தெற்கு, மானிப்பாய்.

(சி-281)

### மட்டக்களப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பவியரணைத் தொடர்ந்த இத்தாக்குதல் உக்கிரமடைந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு பகுதியில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் படையினர் தொடர்ந்தும ஈடுபட்டுவருவதாகவும் ராணுவவட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ச)

### போட்டி பூசல்களுடன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள், மற்றும் சிப்பாய்களிமத்தியில் தற்போது நிலவிவரும் போட்டி பொறாமைகள் களையப்பட்டு ஒற்றுமை நிலவினால் தான் நாம் விடுதலைப் புலிகளை வெற்றி கொள்ளமுடியும்.

இராணுவத்துக்குள் ஒழுக்கம் தவறி நடக்கும் இராணுவ அதிகாரிகள் எவராக இருப்பினும் அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப் படுவார்களென்று இராணுவத்தளபதி மேலும் கூறியுள்ளார். (வி)

### கரும் புலிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பப்பட்ட வண்ணம் இருந்தன.

அரச, தனியார்துறை, கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள் எதுவும் நேற்று தமிழீழம் எங்கும் செயற்படவில்லை. அத்தியாவசிய சேவைகள் மட்டும் இயங்கின.

வடமராட்சி, தென்மராட்சி வலிகாமம் பகுதிகளில் நேற்று கரும்புலிகள் தினத்தை யொட்டி பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன

இக்கூட்டங்களில் விடுதலைப் புலிப் பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டு கரும்புலிகளின் தியாகங்கள் குறித்து உரையாற்றினார்கள்.

நெல்லியடியில் நேற்றுக் காலை 9-30 மணிக்கு கரும்புலிகள் நினைவாலயத்தில் மட்டு, அம்பாறை மாவட்ட விசேட தளபதி திரு. கருணா அம்மான் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து நெல்லியடி பொற்றுவத்தை பூமகள் சனசமூக நிலையத்தடியில் கரும்புலிகள் எழுச்சிக் கிராமத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வடமராட்சித் தளபதி திரு. அருணா எழுச்சிக் கிராம அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் கரும்புலிகள் நினைவுக்கல் திரை நீக்கமும், கரும்புலிகளின் உருவப்படத் திரை நீக்கமும் செய்யப்பட்டன.

கரும்புலிகள் தின நடுகல்லை கடற்புலிகள் சிறப்புத் தளபதி திரு. சூசை திரைநீக்கம்செய்து வைத்தார்.

தொடர்ந்து 4 கரும்புலிகளின் உருவப்படங்களை விடுதலைப் புலி உறுப்பினர்களும் ஏனைய 4 உறுப்பினர்களின் உருவப்படங்களை அவர்களின் பெற்றோர்களும் ஈகைச்சுடர் ஏற்றித்திறந்து வைத்தனர்

தொடர்ந்து வீரவணக்கக் கூட்டம் வடமராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் பைந்தமிழன் தலைமையில் நடைபெற்றது. (க)


விற்பனையாகிறது:
வரதர் கதைமலர்—1

**அவன் பெரியவன்**

சிறுவர்கள் வாசிப்பதற்கேற்ற சுவையான கதை

அநு. வை. நாகராஜன் எழுதியது

விலை ரூபா 12/-
விற்பனையாளர்களுக்கு கழிவுண்டு.

ஆனந்தா புத்தகசாலை,
226, காங்கேசன் துறைச் சாலை,
யாழ்ப்பாணம்.

(ஏ-3225)


## உணவுப் பொருள் விநியோகம்

(அரியாலை)

யாழ் மாவட்டத்திலுள்ள மரணவர்களுக்கான உணவு முத்திரைக்கு தற்பொழுது பொருட்கள்வழங்கப்பட்டுவருகின்றது. (59)

## மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை சிவன்கோவிலில் தேர்மகோற்சவம் இம்மாதம் 14ம் தேதி புதன்கிழமைகொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துநாட்கள் நடைபெறும் 22ம் தேதி தேர்த்திருவிழாவும் 23ம் தேதிஆடிப்பூரத்திருவிழாவும் நடைபெறும்,

## சீருடைகள் வழங்கப்படவில்லை

(மானிப்பாய்)

யாழ். பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலகத்திலும் காணிப்பதிவாளர் அலுவலகத்திலும் பணிபுரியும் அலுவலக ஊழியர்களுக்கு கடந்த3 வருடங்களாக சீருடைத்துணிகள் வழங்கப்படவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது. (71)

## குழாய் திருட்டு ஒருவர் கைது

(அளவாலை)

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தருகிலுள்ள திருமதி ஐயாத்தம்பி பூரணானந்தன் என்பவருடைய வீட்டில் கடந்த மாதம் திருடுப்போன குழிவுக்குழாயை கழுவி சுத்தம் செய்துகொண்டிருந்தபோது காவல்துறையினரிடம் ஒருவர் கையும்மெய்யுமாக பிடிபட்டார். (59)

### றுகுணு கப்பல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கேசன்துறை இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள துறைமுகத்தில் இறக்கப்பட்டு அங்கு களஞ்சியப்படுத்தப் பட்டுள்ளது.

மேற்படிக்கப்பலில் உள்ள எந்த ஒரு பொருள்களையும் விடுதலைப்புலிகள் கொள்ளையடிக்கவில்லை. இப்படியான ஒரு தவறான செய்தி எப்படி வெளிவந்ததுஎன்பதை உடன் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி காங்கேசன் துறை இராணுவ அதிகாரியிடம் கோரப்பட்டுள்ளதாக கட்டுப்படைத் தலைமைச் செயலகம் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (வி)

### நொச்சிமோட்டைக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களில் ஒன்று காவலரணுக்கு எதிர்ப்பக்கமாகவும், மற்றது வலதுபக்கமாக சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நிறுத்திவைக்கப்பட்ட கவசவாகனங்கள் இரண்டும் பின்னர் நேற்று முன்தினம் 10-20 மணியளவில் தாண்டிக்குளம் நோக்கி சென்றதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் நேற்று இப்பகுதியில் ஸ்ரீலங்காப் படையினரால் துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் ஷெல் தாக்குதலும் நடாத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

### தொலைத் தொடர்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கோரியும் திணைக்களமாக இருந்த தொலைத்தொடர்புகள் சேவை கூட்டுத்தாபனமாக மாறியதையடுத்து தமக்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து அரசுக்கு கண்டனம் தெரிவிக்கும் விதமாகவும் இந்தவேலை நிறுத்தத்தை அவர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

தொலைத் தொடர்புகள் அமைச்சர் ஏ. எம். எஸ். அதிகாரியுடன் தொலைத்தொடர்பு ஊழியர் தொழிற்சங்க பிரதிநிதிகள் பேச்சுவார்த்தைநடத்திய பின்னர் ஏற்பட்ட ஓர் இணக்கத்தையடுத்தே வேலைநிறுத்தம் கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ)

### மணிவாக்கு

உறுதியான கற்பாறை யானது காற்றினை அசைவதில்லை அதே போன்று அறிவாளிகள் புகழ், மொழிகளினாலோ அவதூறுகளினாலோ அசைந்து விடுவதில்லை.

— தர்மபதம்

## நமது நோக்கு

### வாக்குறுதி என்னாச்சு?

அரச ஊழியர்களுக்குக் கிடைக்கும் ஊதியம் வாழ்க்கைச் செலவுக்குப் போதுமானதாக இருக்கவேண்டியது அவசியம்.

விஷம்போல் ஏறும் வாழ்க்கைச் செலவைக் கணிப்பிட்டு, அவ்வப்போது ஊதியம் உயர்த்தப்படுகின்றது. வாழ்க்கைச் செலவுப்படி அதிகரிக்கப்படுகின்றது.

அல்லாவிடில், அரச ஊழியர்கள் நிர்வாக வேலைகளில் மன நிம்மதியோடு ஈடுபடமுடியாது. இதனால் பாதிக்கப்படுபவர்கள் பொதுமக்கள்தான்!

யூலை மாதம் முதல் நாற்பது சதவீதம் சம்பள உயர்வு தரப்படும் என அரசு வாக்குறுதி அளித்தது.

மா, எரிபொருள் போன்ற விலைகளின் விலை ஏற்றப்பட்டபோது, சம்பள உயர்வு கிடைக்கும் என்ற மனநிறைவு ஓரளவு சாந்தியை ஊழியர்களுக்கு அளித்தது.

ஆனால் இன்று அவர்களுக்குக் கிடைக்கும் செய்தி என்ன?

சம்பளஉயர்வு ஜனவரிக்குப் பின்போடப்பட்டுள்ளது என அரசு அறிவித்துள்ளது. யுத்தம் தொடருமானால் ஜனவரியிற்கூட இந்த அதிகரிப்பு வழங்க முடியாமற் போய்விடும் நிலை ஏற்படலாம் எனச் சுதந்திரக்கட்சிச் செயலாளர் தர்மசிறி சேனநாயகா தெரிவித்துள்ளார்.

அரச வாக்குறுதிகள், ஒப்பந்தங்கள் பற்றித் தமிழ்ப் பொதுமக்கள் அவ்வளவாக நம்பிக்கை வைத்து நடக்கமுடியாத அளவிற்கு வரலாறு பல பாடங்களைக் கற்பித்துள்ளது!

அண்மையிற்கூட, எழுதிக் கொடுத்த வாக்குறுதியை, பேசலிச் - சாட்டுகள் கூறித் தட்டிக்கழித்த கதையை நாம் மறப்பதற்கில்லை.

தேர்தலில் வெற்றி பெறவே சில வாக்குறுதிகள் வழங்கப்படுகின்றன என உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் குறை கூறப்பட்டது.

ஆனால் இன்றோ, கொடுத்த வாக்குறுதியை உரிய வேளையில் நிறைவேற்றாது இழுத்தடிப்பு நடக்கிறது!

பின்போடப்பட்டதற்காகக் கூறும் காரணங்களில் ஒன்று பாதுகாப்புச் செலவு அதிகரிக்கின்றது என்பதாகும்.

"பயங்கரவாதம் ஒழிகிறோம் பாரீர்" என வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் மூலம் அரசு பாடிவரும் தாலாட்டில் அயர்ந்துவிட்டனர் அரச ஊழியர்கள்.

உண்மைகளை - உள்ள நிலைகளை - உணர்ந்து, விழிப்படைந்து அமைதித் தீர்வுகாண அவர்கள் அரசை நிர்ப்பந்திப்பார்கள் என நம்புகிறோம்!

---

வாகனங்களின் புகையினால்

# சுற்றாடலில் ஏற்படும் பாதிப்பை குறைப்பதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

கொழும்பு நகரில் வாகனங்களிலிருந்து வெளியேறும் புகையை அளப்பதற்காக பொலிஸார் புகைமானியை பயன்படுத்தவுள்ளனர்.

வாகனங்களிலிருந்து வெளியேறும் புகையினால் சுற்றாடலில் ஏற்படும்பெரும்பாதிப்பை குறைக்க மத்திய சுற்றாடல் அதிகார சபையும் வேறு சில அரசநிறுவனங்களும் இணைந்து நடவடிக்கை எடுக்கவுள்ளன. அதன் முதற்கட்டமாகவே மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதேவேளை வாகனங்களிலிருந்து அதிக புகை வெளியேறுவதை தடுக்கும் முகமாக வாகனச் சொந்தக்காரர்களுக்கு அறிவுறுத்தும் இயக்கமொன்றும் ஆரம்பிக்கப்படவுள்ளது. சாதாரணமாக வாகனமொன்றிலிருந்து வெளியாகக்கூடிய புகையின் அளவு எவ்வளவென்பது நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் கொழும்பு நகரின் சூழலிலுள்ள வளி பகுப்பு செய்யப்பட்டது. காபன் மொனொக்சைட், சல்பைட் ஒக்சைட், ஹைதரோ காபன்கள் மற்றும் நைதரசன் என்பன எந்தளவிற்கு கலந்துள்ளன என்பது அறியப்பட்டுள்ளது.

இதன்படி இங்கு நைதரசன் ஒக்சைட் கூடுதலாக காணப்பட்டது. ஏனைய வாயுக்கள் 'உலக சுகாதார ஸ்தாபனத்தால்' விதிக்கப்பட்ட எல்லைகளுக்குட்பட்டதாகவே இருந்தன.

நாட்டிலுள்ள வாகனங்களில் சுமார் 60 சதவீத வாகனங்கள் கொழும்பிலேயே பாவிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

---

## யாழ். ஆஸ்பத்திரியில் ஒன்றரை லட்சம் பேர் சிகிச்சை பெற்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பொது வைத்தியசாலை வெளிநோயாளர் பகுதியில் இவ்வருடம் ஜனவரி மாதத்திலிருந்து ஜூன் மாதம் வரையில் 1,55,678 பேர் சிகிச்சை பெற்றிருக்கின்றனர்.

இவர்களில் 20ஆயிரம் பேர் வரை வெளிநோயாளர் பகுதியில் பலதடவை சிகிச்சைபெற்றுள்ளனர்.

பலதரப்பட்ட காய்ச்சல்களினாலும் வயிற்றுளைவு ஆஸ்மா, வாய்அவியல், மலேரியா, சிறிய சிறிய விபத்துக்கள், நாய்க் கடிக்குள்ளாகியும் வேறும் பல நோய்களுக்குள்ளாகியும் சிகிச்சை பெற்றிருக்கின்றனர்.

கூடுதலான நோயாளர்கள் மே மாதத்திலும் யூன் மாதத்திலுமே சிகிச்சைபெற்றிருப்பதாக தெரியவந்துள்ளது. (56-இ)

---

## பெனாஸிர் பூட்டோ நவாஸ் ஷெரீப்புக்கு அழைப்பு

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் எதிர்க்கட்சித் தலைவி பெனாஸிர் பூட்டோ பாகிஸ்தானில் தற்போது ஏற்பட்டுள்ள சிக்கல் நிலவரம் குறித்து பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு பிரதமர் நவாஸ் ஷெரீப்பிற்கு அழைப்பு விடுத்துள்ளார்

பிரதமர் நவாஸ் ஷெரீப்புக்கும் பாக் ஜனாதிபதி குலாம் இஷாக்கானுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலை குறித்து பேச்சுவார்த்தை நடாத்துவதற்கே இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டதாக தலைநகரிலிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பஞ்சாப் மாகாணத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது தொடர்பாக இருவருக்கும் இடையில் கருத்துவேறுபாடுகள் ஏற்பட்டமை தெரிந்ததே. (க-இ)

---

### குரக்கன் செய்கையாளருக்கு மண்ணெண்ணெ விநியோகம்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் குரக்கன் செய்கையில் ஈடுபட்டுவரும் விவசாயிகளுக்கு கட்டம்கட்டமாக 30 லீற்றர் மண்எண்ணெ வழங்கப்படவுள்ளது.

சண்டிலிப்பாய்பிரதேசசெயலர் திரு. கா. சந்திரன் இதற்கான ஒழுங்குகளைமேற்கொண்டுள்ளார்.

நான்கு பரப்பு நிலத்தில் குரக்கன் செய்கையை மேற்கொள்ளும் விவசாயி ஒருவருக்கு ஆறு கட்டங்களில் ஒரு கட்டத்திற்கு ஐந்து லீற்றர் மண்எண்ணெ வீதம் வழங்கப்படும் என்றும், இதில் ஏற்கனவே இரண்டு கட்ட மண்எண்ணெ வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. -72

---

## நீரிறைக்கும் இயந்திரங்கள் 100 யாழ். வந்தன

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட விவசாய கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு "வாதுவ" கப்பலில் எடுத்துவரப்பட்ட நூறு நீரிறைக்கும் இயந்திரங்கள் விநியோகம் செய்யப்படவுள்ளது.

இங்குள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக இவை கொழும்பு விலையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படும் என்பதை தெரிவிக்கப்பட்டுள்ளது. (—1547 2-சி)

---

## இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் இன்று மேன்முறையீடு செய்யலாம்

(யாழ்ப்பாணம்)

கெற்பலி, நாவற்குழி, பருத்தித்துறை கிழக்குப் பகுதிகளுக்கு இம்மாதம் 1ம் திகதி தொடக்கம் இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் மேன்முறையீடு செய்யலாம் என்று யாழ். பிரதேசக் கல்விப்பணிப்பாளர் திரு. ஆ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்துக்கு வெளியேயும், தீவகத்தில், நெடுந்தீவு, அனலைதீவு எழுவைதீவு ஆகிய பகுதிகளில் சேவை செய்தவர்களும் திருமணமான பெண் ஆசிரியர்கள் விரும்பினால் மேன்முறையீடு செய்யலாம்.

மேன்முறையீடுகள் இன்று 6ம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு முன்பு நேரடியாக சமர்ப்பிக்கலாம் என்றும் இன்றையதினம் பிற்பகல் 2 மணிக்கு மேன்முறையீடுகள் பரிசீலிக்கப்படும் என்றும் யாழ் கல்விப்பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். -ம

---

## அரச ஊழியரின் சுகவீன லீவு குறித்த நடைமுறையில் தளர்வு

(பண்டத்தரிப்பு)

கொழும்பிலுள்ள பொது நிர்வாக மாகாண உள்நாட்டலுவல்கள் அமைச்சு அரசாங்க ஊழியர்கள் தங்கள் சுகவீன லீவுகளுக்கு டாக்டர்களின் வைத்திய அத்தாட்சிப்பத்திரம் வழங்குவது தொடர்பாக ஏற்கனவே நடைமுறையில் இருந்து வரும் உபவிதிகளில் மாற்றம் செய்து புதியதொரு சுற்று நிருபத்தை வெளியிட்டுள்ளது.

இதன் பிரகாரம் வைத்திய கவுன்சிலில் பதிவு செய்யப்பட்டிருக்கும் தனிப்பட்ட தொழில் செய்யும் டாக்டர்களும் மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களும் சுகவீன லீவுகளுக்கான அத்தாட்சிப் பத்திரத்தை கூடிய காலத்திற்கும் வழங்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை ஆயுர்வேத வைத்தியர்கள் அரசாங்க ஊழியர்களுக்கு 14 நாட்களுக்கு உட்பட்ட வைத்திய லீவையே வழங்கக்கூடியதாக இருந்தது குறிப்பிடத்தக்கது. புதிய சுற்று நிருபத்தின்படி கூடிய காலத்திற்கு வைத்திய அத்தாட்சிப்பத்திரம் வழங்க வழி செய்கின்றது.

இதேவேளை யாழ். மாவட்டத்திலுள்ள திணைக்களங்கள் பலவற்றிற்கு இந்த புதிய சுற்றுநிருபம் இதுவரை கிடைக்கவில்லை என்று அறியப்படுகின்றது 72-இ)

---

## இன்று

(கொழும்புத்துறை)

குருநகர் கிறிக்கெட் சனசமூக நிலையத்தில் யாழ். சாவகச்சேரி வைத்திய அதிகாரியினால் இன்று 6ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணி தொடக்கம் கோழிகளுக்கு நோய்த்தடுப்பு ஊசி மருந்து இலவசமாகப் ஏற்றப்பட உள்ளது. (157-59)

0 0 0

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி பிள்ளையார் அ. மி. த. க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப்போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலையில் பாடசாலை அதிபர் திரு க. நடராசா தலைமையில் இடம்பெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். கந்தர்மடம், ஸ்ரீ சிவகுருநாத குருபீடம் வேதாந்த மடத்தில் தொடர் விரிவுரை நிகழ்த்திய காரணவாய் வேதாரணிய ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ கை. திருஞானசம்பந்தக்குருக்களுக்கு இன்று 6ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு குருபீடத்தில் பாராட்டு விழாவொன்று நடாத்தப்படவுள்ளது.

குருபீடாதிபதி ஸ்ரீமதி சோமாஸ் கந்தவேள் சுவாமிகளின் தலைமையில் நடைபெறவுள்ள இப்பாராட்டு விழாவில் மேலதிக அரச அதிபர் திரு ஆ. சிவலிங்கம், பண்டிதப்புலவர் க. சி. குலரத்தினம், பிரம்மஸ்ரீ சி வெங்கடேஸ்வரசர்மா, யாழ். பல்கலைக்கழகஇந்து நாகரீகத்துறை விரிவுரையாளர் திருமதி நாச்சியார்செல்வநாயகம் ஆகியோர் பாராட்டு வழங்குவார்கள்.

---

## தமிழ்நாட்டில் தேசிய ஒருமைப்பாட்டு குழு அமைக்கப்பட்டது

(சென்னை)

முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தலைமையில் மாநில அளவிலான தேசிய ஒருமைப்பாட்டுக் குழு ஒன்றை தமிழக அரசு அமைத்துள்ளது.

மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவானின் யோசனைக்கு இணங்க இந்த குழு அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் ஒற்றுமைக்கும்; ஒருமைப்பாட்டுக்கும் அச்சுறுத்தலாக இருக்கும் சக்திகளை இனம் கண்டு அவற்றை முறியடிப்பதற்கான பொதுக்கருத்தை இந்தக்குழு உருவாக்க இருக்கின்றது.

மாநிலசிறுபான்மை இரண்டு அமைச்சர்கள், சட்டப்பேரவை உறுப்பினர் ஒருவர், மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஒருவர் ஆதி திராவிட பழங்குடி உறுப்பினர் ஒருவர் பத்திரிகையாளர் ஒருவர் இந்தக் குழுவில் அங்கம் வகிப்பார்கள் சுழல் முறையில் ஒவ்வொரு ஆண்டும் முஸ்லீம் அல்லது கிறிஸ்தவ பிரதிநிதி ஒருவர் இடம் பெறுவர். -ம

---

### சுதந்திரப் பறவைகள் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

"சுதந்திரப் பறவைகள்" ஆடி மாதம் இதழ் வெளிவந்துள்ளது பெண்களுக்கு எதிரான கொடுமைகள், ஆய்வுகள் தரும் திடுக்கிடும் செய்தியோடு என்ற தலைப்புச் செய்தியாக வெளிவந்திருக்கும் இவ் இதழில் "நான் கண்ட கிராமத்தின் பெண்கள்", உருவழிந்த கரும்புலிகள் மீண்டும் உயிர் பெறுவர் கரும்புலிகள் எண்மரின் புகைப்படங்கள், விழிகள் திறக்கின்றன சிறுகதை போன்ற பல்வேறு அம்சங்கள் தாங்கி வெளிவந்துள்ளது. —ம

---

## டெங்கு காய்ச்சல் பரவுகிறது

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் டெங்கு காய்ச்சல் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இப்பகுதியில் அண்மையில் பெய்த பெருமழையையடுத்து ஏற்பட்ட நுளம்பு பெருக்கத்தினாலேயே இந்நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

டெங்கு காய்ச்சலினால் 3 பேர் இறந்துள்ளதாகவும் 89 பேர் இக்காய்ச்சலினால் அவதிப்படுவதாகவும் தெரிய வருகிறது. —க-இ

# எதிரிகள் எம்மைச் சூழ்ந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தனிமனிதனாக எமது போராளி ஒருவன் தன்னை அழித்து தனது தேசத்தை பேரழிவிலிருந்து காப்பாற்றினான்.

முதன் முதலாக எமது போராட்ட வரலாறு தியாகத்தின் அதியுன்னதமான ஒரு அற்புதத்தை பதிவு செய்து கொண்டது. அதிலிருந்து எமது போராட்டமரபில் ஒரு புதிய அத்தியாயம் பிறந்தது.

## புதிய போர் வடிவம் பிறந்தது

என்றுமில்லாத வகையில் ஒரு புதிய போர்வடிவம் அறிமுகப்படுத்தப்பட்டது. கப்டன் மில்லருடன் கரும்புலிகள் சகாப்தம் ஆரம்பமாகியது.

என்றுமே உலகம் கண்டிராத எண்ணிப்பார்க்க முடியாத தியாகப் படையணியொன்று தமிழ் ஈழத்தில் உதயமாகியது.

## கரும்புலிகள் வரலாற்றுத் தேவை

கரும்புலி வீரர்களின் தோற்றமும் தற்கொலைப்படையாக அவர்களின் வளர்ச்சியும் எழுச்சியும் மிகவும் நுட்பமான அவர்களின் போர்ச்சாதனைகளும் எமது போராட்டத்தின் ஒரு வரலாற்றுத் தேவையாகவே எழுந்தது.

நாம் இனஅழிவை எதிர்கொள்ளும் ஒரு சிறிய தேசிய சமுதாயம். எமக்குக்குரல் கொடுக்கவோ, கை கொடுக்கவோ உலகில் எவரும் இல்லை. நாம் தனித்து நிற்கிறோம். எமது சொந்தக் கால்களில் நின்று நிற்கிறோம்.

## நிர்க்கதியாக நிற்கிறோம்

பலம் வாய்ந்த எதிரிகள் சூழ்ந்து நிற்கிறார்கள். எம்மை ஒழித்துக்கட்ட உறுதி பூண்டு நிற்கிறார்கள். முழு உலகமுமே ஒன்றிரண்டு எமது எதிரிகளுக்கு முண்டு கொடுத்து வருகிறது.

இந்த இக்கட்டான நிலையில் நிர்க்கதியாக நிற்கும் ஒரு மக்கள் சமூகம் என்ற ரீதியில் நாம் எம்மாலான சகல வழிகளையும் கையாண்டு எமது சக்தி அனைத்தையும் பிரயோகித்து ஒரு தற்காப்பு போரை நிகழ்த்த வேண்டும்.

இத்தேவையை நிரப்புவதை நாம் அசட்டை செய்ய முடியாது. அல்லாத பட்சத்தில் நாம் இனவாரியாக அழிந்து போவதை தவிர்க்க முடியாது.

## கரும்புலிகள் தற்காப்பு கவசங்கள்

பலவீனமான எமது மக்களின் மனப்பலம் வாய்ந்த ஆயுதமாகவே கரும்புலிகளை நான் உருவாக்கினேன்.

கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்புக்கவசங்கள். எமது போராட்டப்பாதையின் தடைநீக்கிகள். எதிரியின் படைபலத்தை மனப்பலத்தால் உடைத்தெறியும் நெருப்பு மனிதர்கள்.

## தெய்வீகப் பிறவிகள்

கரும்புலிகள் வித்தியாச மானவர்கள். அபூர்வமான பிறவிகள். இரும்பு போன்ற உறுதியும், பஞ்சு போன்ற நெஞ்சமும் கொண்டவர்கள். தங்களது அழிவின் மையத்தில் ஆத்மத்தைக் காணும் ஆழமான மக்கள் நேயம் படைத்தவர்கள்.

இந்த உலகில் வாழும் மனிதன் ஒவ்வொருவனும் எல்லாவற்றிலும் மேலாகத் தன்னையே காதலிக்கிறான். தனது உயிரையே நேசிக்கிறான். உயிர் வாழவேண்டும் என்று துடிக்கிறான். மனிதன் உயிரை நேசிப்பதால், உயிர் வாழ விரும்புவதால், உயிர் அற்றுப் போகும் சாவு என்ற இல்லாமை நிலைக்குப் பயப்படுகிறான். இது மனித இயல்பு. இயற்கையின் நியதி.

ஆனால் ஒரு கரும்புலி வீரன் தன்னைவிடத் தனது இலட்சியத்தையே காதலிக்கிறான். தனது உயிரைவிடத் தான் வரித்துக்கொண்ட குறிக்கோளையே நேசிக்கிறான். அந்தக் குறிக்கோளை அடைவதற்குத் தன்னை அழிக்கவும் அவன் தயாராக இருக்கிறான். அந்தக் குறிக்கோள் அவனது சுயத்திற்கு அப்பால் நிற்கும் மற்றவர்களின் நலன் பற்றியது. நல்வாழ்வு பற்றியது. மற்றவர்கள் இன்புற்று இருக்க வேண்டும் என்பதற்காகத் தன்னை இல்லாதொழிக்கத் துணிவது தெய்வீகத் துறவறம். அந்தத் தெய்வீகப் பிறவிகள்தான் கரும்புலிகள்.

தேசிய விடுதலை என்ற உயரிய இலட்சியத்தைத் தழுவிக்கொள்ளும் ஒவ்வொருவனும் முதலில் தன்னை விடுதலை செய்து கொள்ள வேண்டும். தனது மனவுலக ஆசைகளிலிருந்தும் அச்சங்களிலிருந்தும் தன்னை விடுதலை செய்து கொள்பவன்தான் உண்மை விடுதலை வீரன் என்ற தகைமையைப் பெறமுடியும். மனமானது பயங்களிலிருந்து விடுதலை பெறும்போதுதான் வீரம் தோன்றுகிறது; துணிவு பிறக்கிறது. இந்த மனவியல் உண்மையை நான் ஆரம்பத்திலிருந்தே எமது போராளிகளுக்கு எடுத்துரைத்து வருகிறேன்.

## இரும்பு மனிதர்கள்

பயம் என்பது பலவீனத்தின் வெளிப்பாடு. கோழைத்தனத்தின் தோழன். உறுதிக்கு எதிரி. மனித பயங்களுக்கு எல்லாம் மூலமானது மரணபயம். இந்த மரணபயத்தைக் கொன்றுவிடுபவன்தான் தன்னை வென்றுவிடுகிறான். அவன்தான் தனது மனச்சிறையிலிருந்து விடுதலை பெறுகிறான்.

கரும்புலிகள் பயத்தின் வேர்களைப் பிடுங்கி எறிந்தவர்கள். சாவு அவர்களிடம் சரணடைந்துவிடுகிறது. மரணத்தின் நாளை அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். சாவு பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. தம்மை அழிக்கும் அந்த இறுதிக் கணத்திலும் தமது இலக்கை அழிக்கும் நோக்கிலேயே அவர்கள் கண்ணும் கருத்துமாக இருப்பர். இலட்சிய உறுதியில் அவர்கள் இரும்பு மனிதர்கள்.

'கரும்புலி' என்ற சொற்பதத்தில் கருமையை மனோதிடத்திற்கும், உறுதிப்பாட்டிற்குமே நாம் குறிப்பிடுகிறோம். இன்னொரு அர்த்தபரிமாணத்தில் இருளையும் அது குறியீடு செய்யும். பார்வைக்குப் புலப்படாத, பூடகமான, இரகசியமான தன்மையையும் செயற்பாட்டையும் அது குறித்துநிற்கும். எனவே 'கரும்புலி' என்ற சொல் பல அர்த்தங்களைக் குறிக்கும் ஆழமான படிமமாக அமையப்பெற்றிருக்கிறது.

## வரலாற்றுக் காவியங்கள்

இந்த இரகசியத் தன்மை கரும்புலிகளின் செயற்பாட்டு வெற்றிக்கு மூலாதாரமானது. ஆளுக்கும் பெயருக்கும் அப்பால், அந்த தனிமனித தனித்துவத்திற்கு அப்பால், செயற்பாடே இங்கு முதன்மை பெறுகிறது. மனிதர்களின் இருப்பைவிட மனிதர்களின் செயற்பாடே ஒரு போராட்ட வரலாற்றின் சக்கரத்தைச் சுழற்றுகிறது. பல கரும்புலி வீரர்கள் இன்று பெயர் குறிப்பிடாத கல்லறைகளில் அநாமதேயமாக உறங்கியபோதும் அவர்களது அற்புதமான சாதனைகள் வரலாற்றுக் காவியங்களாக என்றும் அழியாப் புகழ்பெற்று வாழும்.

முகத்தை மறைத்து, பெயரையும் புகழையும் வெறுத்து, இலட்சிய மூச்சாக தமிழீழ விடுதலைக் காற்றுடன் கலந்துவிட்ட இந்த சரித்திர நாயகர்களை நன்றியுடன் நினைவுகூர்ந்து தாழ்ந்து வணங்குகிறேன்.

## தியாகத்தின் இமயம்

மனித தியாகத்தின் இமயத்தைத் தொட்டுவிட்ட இந்த இனிமையானவர்களை நான் அறிவேன். அவர்களது நெஞ்சத்தின் பசுமையில் ஊற்றெடுத்த உணர்வுகளையும் நான் புரிவேன். ஏதோ ஒன்று, மனித விடிவை நோக்கி நகரும் உந்துசக்தியாக அவர்களை ஆட்கொண்டிருந்தது. அந்த விடுதலையின் தாகத்தைத் தீர்க்க எதையும் செய்வதற்கு அவர்கள் தயாராக இருந்தார்கள். அவர்களை அரவணைத்து விடையளிக்கும்போது இனம்புரியாத உணர்வுகளால் எனது ஆன்மா நடுங்கும்.

ஒரு புனித யாத்திரையில் அவர்கள் போனார்கள். கண்ணீர் வடித்து நிற்கும் எமது மக்களுக்கு ஒரு புதியவாழ்வு பிறக்கும் என்ற அசையாத நம்பிக்கையில் அந்தத் தியாகப் பயணத்தைத் தொடர்ந்தார்கள். அந்த புனிதவாளர்களை எண்ணும் பொழுது எல்லாம் எனது நெஞ்சு புல்லரிக்கும்.

## நசுக்கிவிட முடியாது

கரும்புலி வீரர்கள் பற்றி இன்று முழு உலகமும் பேசுகிறது. அவர்களது மகத்தான தியாகத்தைக் கண்டு மலைத்துப்போய் நிற்கிறது. பூகம்ப அதிர்வாகக் குமுறும் எமது போராட்டத்தின் உக்கிரத்தை உலகசமுதாயத்திற்கு உணர்த்தியவர்கள் கரும்புலிகளே.

அன்றொரு காலம் அமைதி வழியில் உரிமை கேட்டு ஆர்ப்பரித்த தமிழினத்தை அடக்குமுறையாளனின் இரும்புக்கரங்கள் நசுக்கிவிட்டது. இன்று நீதிகேட்டு நெருப்பாக எரியும் தமிழரின் ஆவேச எழுச்சியை எந்தச் சக்தியாலும் நசுக்கிவிட முடியாது.

## கரும்புலிகள் சகாப்தம்

இது கரும்புலிகள் சகாப்தம். இடியும் மின்னலுமாகப் புலிகள் போர்க்கோலம் கொண்டுவிட்ட காலம்.

இந்தப் புதிய யுகத்தில் எமது போராட்டம் புதிய பரிமாணங்களில் விரியும். சாவுக்கு விலைகிட்ட மறவர்கள் புதிய சரித்திரம் படைப்பார்கள். எமது சந்ததியின் விடிவுக்கு விளக்கேற்றி வைப்பார்கள்.

கரும்புலிகளின் புனித தினமாகிய இன்றைய நாளில், வரைபடாத சித்திரங்களாகவும், எழுதப்படாத சரித்திரங்களாகவும் எமது வாழ்வுக்காக தமது வாழ்வைத் துறந்த அந்த அற்புதமான தியாகிகளை எமது நெஞ்சில் நிறுத்தி பூஜிப்போமாக. (ஈ)

### ஆனமடுவவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போத்தலில் இருந்த குண்டு பாரிய சத்தத்துடன் வெடித்ததாகக் குண்டு வெடித்த இடத்தில் காயங்களுடன் தப்பிய மாணவர் ஒருவர் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

குண்டு வெடித்த இடத்தில் 3 மாணவர்கள் பலியானார்கள். படுகாயமடைந்த மாணவர் ஒருவர் ஆஸ்பத்திரியில் பலியானார். மரணமான மாணவர்கள் 9 வயதுக்கும் 12 வயதுக்கும் உட்பட்டவர்களாவர்.

இவர்கள் அனைவரும் ஆனமடுவ மத்திய மகாவித்தியாலய மாணவர்களாவர்.

தூரத்தில் மேய்ந்துகொண்டிருந்த மாடு ஒன்றைத் துரத்திச் சென்றதால் தான் இந்த விபத்திலிருந்து காயங்களுடன் தான் தப்பியதாக உயிர் தப்பிய மாணவர் தெரிவித்துள்ளார். (வி-இ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு யூலை மாதம் 06-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the Genneral Post office, Sri Lanka under Licence Number B/10336/B

# தமிழகத்திலிருந்து நாடு திரும்பும் இல. அகதிகளுக்கு புனர்வாழ்வு திட்டம்

(கொழும்பு)

தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு திரும்ப விருப்பம் தெரிவித்த ஆறாயிரம் தமிழ் அகதிகளுக்கான புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருதாக புனர்வாழ்வு சபைத் தலைவர் திலக் சந்திரசேகரா தெரிவித்துள்ளார்.

இலங்கை திரும்பும் அகதிக் குடும்பம் ஒன்றுக்கு 2,000 ரூபாவும், தொழில் முயற்சிக்கென 4 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும் எனவும் வீடமைப்புக்கென 15 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களும் 6 மாதங்களுக்கான உலர் உணவு நிவாரணம் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் உறுதியளித்துள்ளார்.

அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்பும் பணியில் இந்திய அரசும், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயமும் இணைந்து ஈடுபட்டுவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அகதிகள் அடுத்த மாதம் முதல் கட்டம் கட்டமாக அனுப்பி வைக்கப்படவுள்ளதும் மன்னார் மற்றும் திருமலைக்கு இவ்வகதிகளை அனுப்புவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதும் தெரிந்ததே. (க)

# யாழ். மாவட்டத்தில் 650 தமிழர் 6 மாதத்தில் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடந்த 6 மாத காலத்தில் மட்டும் 650 தமிழ்மக்கள் உயிரிழந்துள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை புள்ளிவிபரம் தெரிவிக்கின்றது.

இப்பகுதியில் தொடரும் இராணுவ நடவடிக்கைகள், மற்றும் பொருளாதார நடவடிக்கைகளினாலும் மற்றும் 'செப்ரிசிமியா' போன்ற வியாதி மூலமாகவுமே மேற்படி மரணங்கள் இடம்பெற்றுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

மேலும் பட்டினி நிலையும், அடிப்படை சுகாதாரவசதியின்மையும் மற்றும் இப்பகுதியில் நிலவும் மருந்துத்தட்டுப்பாடும் இம்மரணங்களுக்குக் காரணமாகுமெனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (ஈ)

# கொழும்பு மாநகரின் சட்டவிரோதக் குடியேற்றம் வெளியேற்றப்பட்டது

(கொழும்பு)

கொழும்பு நகரத்தின் மத்தியில் சட்டவிரோதமாக வீதி ஓரங்களிலும், கால்வாய் ஓரங்களிலும் வீடுகளை அமைத்திருந்த நூற்றுக்கணக்கான குடும்பங்களை பொலிஸார் தற்போது பலவந்தமாக அப்புறப்படுத்தி வருகின்றார்கள்.

கொழும்பு நகரின் வெளிப்புறத்தில் அரசினால் ஒதுக்கப்பட்டுள்ள பிறிதொரு இடத்தில் குடியேறும்படி இந்தக் குடும்பங்களுக்கு அரசு மூன்று மாதங்களுக்கு முன் அறிவித்தல் கொடுத்தபோதும் இக்குடும்பங்கள் அங்கு செல்ல மறுப்புத்தெரிவித்துவந்தன.

கடந்த சனிக்கிழமை முதல் பொலிஸார் இந்தக் குடும்பங்களின் வீடுகளை உடைத்து அவர்களைப் பலவந்தமாக வெளியேற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ராவ் - மேத்தா விவகாரம்: சுப்ரீம் கோர்ட் மனுவை தள்ளுபடி செய்தது

(புதுடில்லி)

பிரதமர் பி. வி. நரசிம்மராவுக்கு பங்குச்சந்தை தரகர் ஹர்ஷத்மேத்தா பணம் கொடுத்த விவகாரம் தொடர்பாக சம்பந்தப்பட்ட இருவர் மீதும் வழக்குத் தொடருமாறு மத்திய அரசையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் பணித்திடுமாறு நீதிமன்றத்தைக் கோரும்மனு நேற்று புதுடில்லி சுப்ரீம் கோர்ட்டினால் தள்ளுபடி செய்யப்பட்டது.

பொதுநல அமைப்புகள் பல ஒன்றிணைந்து மேற்படி மனுவை தாக்கல் செய்ததாக இவ்வழக்கை விசாரித்த நீதிபதி என். பி. சிங் தெரிவித்துள்ளார்.

மேற்படி மனு பங்குச்சந்தை தரகர் ஹர்ஷத் மேத்தா அண்மையில் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்த கருத்துக்களை பின்பற்றி தயாரிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

# பி. ஜே. பி. — ஜனதாதள் கருத்து வேறுபாடு

(புதுடில்லி)

எதிர்வரும் நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவதற்கு பாரதீய ஜனதாக் கட்சி முயற்சி செய்வதாகக் கூறப்படுவதனை ஜனதாதள் கடுமையாகக் குறைகூறியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக பாரதீய ஜனதாக்கட்சி ஏனைய எதிர்க்கட்சிகளுடன் கலந்துரையாடியிருக்கவேண்டும்என அக்கட்சியின் முக்கியஸ்தர் ஹரிகிஷன் சிங் குறைப்பட்டுக் கொண்டாராம்.

## இராசிபலன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

விருச்சிகம்: இல்லசிறப்பு, கடுமையான வாதம், புகழ்.

தனுசு: நிலைமாற்றம், பெண் உபத்திரவம், கடும் சினம்.

மகரம்: தனலாபம், உறவினர் பெருமை, தெய்வதரிசனம்.

கும்பம்: விநோதமான செயல், சுகக்குறைவு, யோசனை.

மீனம்: குருதரிசனம், மரியாதை, காரிய ஜெயம்.

— ஜோஸியர்.